**அநுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரிம் -2025**

---------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அநுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரியின் (''கல்லூரி'') 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்லூரியின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 ஆம் ஆண்டிற்குரிய மாணவர் உதவிக் கொடுப்பனவிற்காக 2026 சனவரி 06 ஆம் திகதி | மனவர் உதவித் தொகை செலுத்துவதற்குரிய பணம் அட்டுறு செலவினமாக | நியமத்தின் பிரகாரம் ஆண்டிற் குரிய சகல வருமானங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்ற ரூபா 3.78 மில்லியன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 06 இன் 8 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமனமாக கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. எனினும் மாணவர் உதவித் தொகை செலுத்தும் செலவினம் 2025 ஆம் அண்டின் போது அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 3.78 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிச் நிதிச் செயலாற்றல் கூற்றில் பற்றாக்குறை மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | இருந்தமையால் அந்தச் செலவினம் அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் வருமான பாதுகாப்பு எண்ணக் கருவின் கீழ் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படவில்லை. | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை இனங்காணல் மற்றும் அளவிடலுக்காக ஏதாவதொரு உரிய நிறுவனமொன்றின் கிரய மாதிரி அல்லது மீள்மதிப்பீட்டு மாதிரி தமது கணக்கீட்டு கொள்கைகளாக தெரிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 3.1 இன் கீழ் கிரயம் / மீள் மதிப்பீட்டுப் பெறுமதி இரண்டும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் எந்த வகையான சொத்துக்களின் வகுப்பிற்காக கிரய மாதிரி பயன்படுத்தப்பட்டிருந்தது எனவும் எந்த வகையான சொத்துக்களுக் காக மீள்மதிப்பீடு மாதிரி பயன்படுத்தப்பட்டிருந்தது எனவும் இனங்காண முடியாதிருந்தது. | இறுதிக் கணக்குகளில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சகல சொத்துக்களும் கிரயத்தில் பெறுமதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. அது இறுதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் 07 இன் 40 ஆம் பந்திக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாதிருந்தமையால் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 105.73 மில்லியன் ஆன 03 சொத்து விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை | இந்த முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து பூர்த்தியடைந்த சொத்துக்களில் உள்ள அநேகமான சொத்துக்கள் தற்போது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் ஒரு பகுதி மாத்திரம் பயன்படுத்தப் படுகின்றது. அவ்வாறு மேலும் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் பெறுமதியை மீள் மதிப்பீடு செய்து எதிர்வரும் கணக்காண்டின் | நியமத்தின் 07 இன் 65 ஆம் பந்திக்கு இணங்க தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்யப் பட்டிருக்கவில்லை. | போது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ள சொத்துக்களை விற்றுத்தீர்த்து புத்தகங்களிலிருந்து அகற்றுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 77 மற்றும் 141 ஆம் பந்திகளின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் போது ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீட்டு முறைமை பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்களும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. எனினும் நிதிக்கூற்றுக் களின் குறிப்பு இலக்கம் 3.3(இ) இன் கீழ் ஊழியர் நலன் பொறுப்புக்கள் தற்போதைய பெறுமதியின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது என காண்பிக்கப்பட்டுள்ளது. | நடப்பாண்டின் இறுதியின் போது கல்லூரியில் இருந்த மொத்த நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்துடன் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 25 ஆகும். அதனால் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் தற்போதைய பெறுமதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. | நியமம் 19 இன் பிரகாரம் பணிக் கொடை ஒதுக்கீடு செய்யும் போது ஆயுட் கால எண்ணிக்கை மதிப்பீட்டு முறைமை பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிறுவனத்தால் கூட்டுமொத்தமாக ரூபா 5.42 மில்லியன் ஆன 05 நிலையான வைப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அதற்காக சட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | கல்லூரியினால் பேணிச் செல்லப்படுகின்ற நிலையான வைப்புக்களை ஆரம்பிப்பதற்கு முன் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு நிதி முதலீடுகளுக்கு ம் முன்னர் உரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) (இ) மற்றும் | நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்க பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றை தயாரித்து பேணிச் | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக வரிசை அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் | கணக்காய்வுச் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர ால் உள்ளகக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 38(2) ஆம் பிரிவுகள் | செல்லப்படுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் கால ரீதியில் மீளாய்வு செய்து தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் உரிய மீளாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பட்டுள்ளது. | கட்டுப்பாட்டு முறைமைகள் கால ரீதியில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவு | கல்லூரியால் மீளாய்வாண்டின் போது அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 04 உத்தியோகத்தர்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 536,885 பதிற்கடமை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பதில் கடமைப் படி கல்லூரியின் முகாமைத்துவ சபையினதும், தொழில்சார் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வரிசை அமைச்சின் செயலாளர் தொழில் சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையின் அங்கத்தவராகவும் இருப்பதுடன் அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப் படவில்லை. | தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பாட நெறிகள் பூர்த்தி செய்யாமல் கைவிட்டு சென்றிருந்த 250 மாணவர்களுக்குரிய ரூபா 1.08 மில்லியன் நூலக வைப்பு பணம் தொடர்புடைய | அந்த நிதி பாடநெறி பூர்த்தி செய்த பின்னர் மீண்டும் மாணவர்களுக்கு செலுத்தப்படுகின்றது. பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களுக்கும் மீண்டும் இந்த நூலக வைப்பை மீளச் | பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களின் நூலக வைப்புத் தொடர்பாக கொள்கை ஒன்று தயாரித்து அதன் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தாமை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை. அதனால் எதிர் காலத்தில் முகாமைத்துவ சபைக்கு அனுப்பி அந்த வைப்புப் பணத்தை செலுத்துவதற்கோ அல்லது செலுத்தாதிருக்குமாயின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்திற்கு எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு உரிய அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கல்லூரியால் 2024 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு அறிக்கையும் 2026 மே 29 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு சொத்துக்களின் இருப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 02(i) மற்றும் 02 (iv) ஆம் பந்திகள் | சகல அரசாங்க ஊழியர்களினதும் வருகை மற்றும் வெளிச்செல்கை கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கல்லூரியின் உத்தியோகத்தர்களின் கைவிரல் அடையாள அறிக்கையை பரீட்சித்த போது 26 உத்தியோகத்தர்களுக்கு 74 சந்தர்ப்பங்களின் போது | இந்த 74 சந்தர்ப்பங்களில் உள்ள வெளிச் செல்கைகளில் 12 சந்தர்ப்பங்களின் போது மின்சாரம் துண்டிக்கப்பட்ட பின்னர் கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழந்தமையினால் வெளிச் செல்லும் பொது அத் திகதியில் கைவிரல் அடையாளத்தை குறிப்பிடுவதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச் செல்கை கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப் படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகை மற்றும் வெளிச் செல்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேலதிக நேரக் கொடுப்பனவின் போதும் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு உறுதிப்படுத்தாமல் 09 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 119,526 மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. | முடியாதிருந்தது. ஏனைய தினங்களுக்காக ஊழியர்களின் விடயங்களை விசாரணை செய்து அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த சகல சந்தர்ப்பங்களிலும் வருகை மற்றும் வெளிச்செல்கைப் பதிவேட்டில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக முறையாக சகல உத்தியோகத்தர்களுக்கும், பதவியணியினருக்கும் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 2026 ஆம் ஆண்டில் இருந்து இதனை முறையாக பேணிச் செல்லப்படும். | |
| (ஊ) | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2014 பெப்ரவரி 10 ஆம் திகதிய இலக்கம் டீஎம்எஸ்/1670 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் 4(அ) ஆம் பந்தி | குறித்துரைத்த திகதிக்கு முன்னர் கையளிக்கின்ற வினாப் பத்திரங்களுக்காக மாத்திரம் விடைப் பத்திர மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் பல்கலைக் கழக கல்லூரியால் 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சகல பரீட்சைப் பெறுபேறுகளும் குறித்து ரைத்த 03 மாதகாலத்திற்குள் விநியோகிக்கப் படாதிருக்கும் போது தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக மொத்தத் தொகையான ரூபா 995,758 மதிப்பீட்டு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளக பரீட்சைகளை நடாத்துவதற்கும் பெறுபேறுகளை விநியோகிப்பதற்குமாக அங்கீகரிக்கப்பட்ட கால எல்லை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முறையான நடைமுறையொன்று காணப்படவில்லை. எனினும் முன்மொழியப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் 03 மாத காலத்திற்குள் பெறுபேறுகளை விநியோகிக்க வேண்டியிருந்த போதும் அது நடைமுறை ரீதியில் திருத்தப்பட்டு இந்த ஆண்டில் இருந்து (2026) அதனை கல்விசார் பதவியணியினரின் அங்கீகாரத்தின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க குறித்துரைத்த திகதிக்கு முன் கையளிக்கப்படுகின்ற விடைப் பத்திரங்களுக்காக மாத்திரம் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் நியாயமான கால எல்லையில் பரீட்சை பெறுபேறுகளை விநியோகிப்பதற்கும் அதன் பிரகாரம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட அரச முயற்சி களுக்கான செயற் பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி | நிதிக் கூற்றுக்களுடன் அந்த ஆண்டிற்குரிய வரைவு வருடாந்த அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கல்லூரியினால் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சகல பல்கலைக்கழக கல்லூரியினாலும் தனித் தனியாக வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படா திருந்ததுடன் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் சகல பல்கலைக்கழக கல்லூரிகளையும் உள்ளடக்கி வருடாந்த அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் கல்லூரிக் குரிய வருடாந்த அறிக்கையும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை எற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 3.2 ஆம் பந்தி. | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்கள் செல்வதற்கு முன்னர் மற்றும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மீளாய்வுக் கூட்டம் (APRM) நடாத்த வேண்டியிருந்த போதிலும் கல்லூரியினால் இது வரை இந்தக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சகல பல்கலைக்கழக கல்லூரியினாலும் தனித்தனியாக வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படாதிருந் ததுடன் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் சகல பல்கலைக்கழக கல்லூரியி னையும் உள்ளடக்கி வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுகின்றது. | சுற்றறிக்கை எற்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு கல்லூரியினாலு ம் வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,438,973 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,265,671 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,173,302 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மூலதன மானியம் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற 06 பாட நெறிகளுக்காக தொழில்சார் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் வழிகாட்டியின் பிரகாரம் 10769 கோட்பாட்டு மணித்தியாலங்களையும், 4988 செய்முறை மணித்தியாலங்களையும் மேவுகை செய்ய வேண்டியிருந்த போதிலும் கல்லூரியால் கோட்பாட்டு மணித்தியாலங்கள் 7463 மற்றும் செய்முறை மணித்தியாலங்கள் 3412 மாத்திரம் மேவுகை செய்யும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கோட்பாட்டு மற்றும் செய்முறை மணித்தியாலங்களில் முறையே 31 சதவீதம் மற்றும் 32 சதவீதம் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவின் கூற்றின் பிரகாரம் 15 வார அரையாண்டிற்குள் பிரயோக செய்முறை வாரத்திற்கு அனுப்பக்கூடிய ஆகக்கூடிய Theory மற்றும் Practical மணித்தியாலங்களின் எண்ணிக்கை 525 மணித்தியாலங்கள் (7x5x15) ஆகும். இந்த தொகுதி மணித்தியாலத்திற்கு மேலதிகமாக IT மற்றும் English வாரத்திற்கு 02 மணித்தியாலம் வீதம் 30 மணித்தியாலங்கள் மேவுகை செய்தல் வேண்டும். அவ்வாறே உங்களால் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் செய்முறை மொயுலுக்காக எங்களிடமுள்ள காலம் ஆகக் கூடியது 495 மணித்தியாலங்கள் ஆகும். அந்தக் கால எல்லையின் கீழ் முகாமைத்துவம் செய்யக்கூடிய ஆகக்கூடிய எல்லை வரை Theory மற்றும் Practical மணித்தியால எண்ணிக்கையின் போது உள்ள விகிதத்தின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்றது. இதற்கான செய்முறைக் கால அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் வழிகாட்டியின் பிரகாரம் பாடநெறியின் தரத் தன்மையைப் பாதுகாக்கும் வகையில் கற்பித்தல் மணித்தியாலங்களை மேவுகை செய்யக் கூடிய பிரகாரம் திட்டங்கள் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக கல்லூரிக்கான செயற்பாட்டுக் கைநூலினால் 6(ஈ) பந்தியின் பிரகாரம் கல்லூரியின் கல்விசார் பதவியணியினர்களால் | உரிய அரையாண்டில் காணப்படுகின்ற கல்விசார் குழுக்களின் எண்ணிக்கை, காணப்பட்ட மொடியுலின் | பல்கலைக்கழக கல்லூரிக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6(ஈ) |

| | | | |
|---|---|---|---|
| | வாரத்திற்கு ஆகக் குறைந்தது 25 கற்பித்தல் மணித்தியாலங்கள் மேவுகை செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக கல்லூரியின் கல்விசார் பதவியணியி னரில் 12 உத்தியோகத்தர்களினால் வாரத்திற்கு 14 மணித்தியாலங்கள் முதல் 24 மணித்தியாலங்கள் வரையிலான வீச்சில் கற்பித்தல் மணித்தியாலங்களின் அளவொன்றை மேவுகை செய்யும் வகையில் தனிப்பட்ட கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. | மணித்தியால எண்ணிக்கை, செயற்பாட்டுக் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள 25 மணித்தியால கால அட்டவணை போன்ற விடயங்களை கவனத்திற் கொண்ட பின்னர் மிகவும் நடைமுறை ரீதியிலும் செயற்திறனான வகையிலும் உரிய கால முகாமைத்துவம் செய்யப்பட்ட கற்பித்தல் கால அட்வணை கல்விசார் பதவியணியினரின் அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. மேலும் செய்முறை செயற்பாட்டுக் கைநூலில் குறிப்பிடப் பட்டுள்ள 6.0.D இற்கு இணங்க பணிப்பாளரால் கையளிக்கப்பட்ட மேலதிக கடமைகள் மற்றும் பதவி களுக்குரிய நடவடிக்கைகளும் அதற்கு புறம்பாக இருந்தது. | பந்தியின் பிரகாரம் தேவையான கற்பித்தல் மணித்தியாலங்களை மேவுகை செய்யும் வகையில் கால அட்டவணை தயாரித்தல் வேண்டும். |
| (இ) | பல்லைக்கழக கல்லூரியில் 2015-2025 காலப் பகுதியின் போது பாட நெறிகளைப் பூர்த்தி செய்யாமல் கைவிட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை (drop out) பாட நெறிகளுக்காக சேர்க்கப்பட்ட மாணவர்களின் 40 சதவீதத்திற்கும் 63 சதவீதத்திற்கும் இடையிலான உயர் சதவீதத்தைக் கொண்டிருந்தது. இவ்வாறே மாணவர்களை பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணமாக உள்ள விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து அதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கல்லூரியின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக் கிடையே பாடநெறிகளை பூர்த்தி செய்து சான்றுதழ் பெற்ற மாணவர் களின் அளவை ஒப்பீட்டு சதவீதமாக கணிப்பிடும் போது 2015 இன் குழுவில் இருந்து 2019 குழு வரை பாடநெறிகளைப் பூர்த்தி செய்த சதவீதம் படிப்படியாக அதிகரித்துள்ளது. எனினும் 2020 இன் குழுக்களில் 63 சதவீத பெறுமதியை அந்தக் குழுக்களுக்காக பாடநெறிகளைப் பூர்த்தி செய்வதற்கு 05 வருடங்கள் கல்விசார் காலத்தை கடந்திருந்த மையை சுட்டிக்காட்டுகின்றோம். மிகுதி அரையாண்டுகளில் அவர்கள் அதைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இடைநடுவில் பாட நெறிகளை விட்டுச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்காக தேவையான நடவக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டில் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டிருந்த 02 ஏக்கர் 03 றூட் 17 பேர்ச் காணியில் அமைந்துள்ள அநுராதபுரம் தொழில்நுட்ப கல்லூரிக்கு உரிய இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றப்படாமையின் காரணமாக | உரிய காணி கல்லூரிக்கு கையளிக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழம் மற்றும் வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வரிசை அமைச்சில் பல கலந்துரையாடல் | கல்லூரியின் கல்விசார மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக போதியளவான இட வசதிகளை ஒதுக்கி செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் கல்லூரியினை |

| | | |
|---|---|---|
| கணக்காய்வுத் திகதி வரை முறையாக கல்லூரிக்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தது. இந்தக் காணியில் 100 பேர்ச் அளவான பகுதியில் அமைந்துள்ள தனிக் கட்டிடம் ஒன்று சகல கல்விசார் நடவடிக்கைகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதன் காரணமாக இடவசதிகள் வரையறுக்கப்பட்டமை மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் வருடாந்த பாட நெறிகளுக்காக 600 மாணவர்கள் அளவில் விண்ணப்பித்த போதும் 240 மாணவர்கள் மாத்திரமே வரையறுக்கப்பட்டு கல்விசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | களுக்காகவும் கல்லூரியின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்தனர். மேலும் கௌரவ பிரதமரின் தலைமையில் இலங்கை பாராளுமத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கல்லூரிக்கு முன்னாள் உள்ள காணிப் பகுதி மற்றும் அதில் தற்போது அமைந்துள்ள உத்தியோக இல்லங்கள் கல்லூரிக்கு கையளிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடாத்திச் செல்லுதல் வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிட சேவை தொழில்நுட்பம் தொடர்பான விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவிக்காக கல்லூரியால் 2016 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த விண்ணப்ப தாரருக்கு ஆட்சேர்த்தல் நடை முறையின் தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் காணப்படாதி ருந்ததுடன் அந்த விண்ணப்பதாரரால் வழங்கப்பட்டிருந்த தொழில்நுட்பவியல் பட்டத்தல் அதன் பதவிக்காக தேவையான விஷேட மற்றும் கௌரவ பட்டம் அல்லாதிருந் தமையும் அது சாராதண பட்டமொன்றாக மாத்திரம் காணப்பட்டது. (SLQF Level 05) | இந்த விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேப்பு நடை முறையின் பிரகாரம் தகைமையுடன் உள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2025 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கல்லூரியினால் ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குரிய 2025 ஆம் ஆண்டின் சனவரி மாதம் ஆரம்ப விசாரணைகள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தாபனவிதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவில் | இது தொடர்பாக முறையாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் 14 – 23 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி மிகுதி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

இருந்து 23 ஆம் பிரிவு வரையான பணி நடைமுறைகள் அமுல்படுத்தி அந்த ஊழியருக்காக 2026 மே மாதம் வரையிலும் பொருத்மமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை.